**செ.வெ.எண்: 561** **நாள்: 01.10.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 30.06.2021 வரை காலியாக உள்ள பதவியிடங்களுக்கு தற்செயல் தேர்தல்கள் எதிர்வரும் 09.10.2021 அன்று நடைபெறவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 30.06.2021 வரை காலியாக உள்ள பதவியிடங்களுக்கு தற்செயல் தேர்தல்கள் எதிர்வரும் 09.10.2021 அன்று நடைபெறவுள்ளது. இதில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாவட்ட ஊராட்சி வார்டு எண்.9, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு எண்.5, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கீழப்பனையூர், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் மாங்காடு, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம் அரசமலை, கீழத்தானியம், மறவாமதுரை ஆகிய கிராம ஊராட்சி தலைவர் பதவியிடங்களுக்கும் 12 ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள 41 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

வேட்பு மனுக்கள் அனைத்தும் 23.09.2021 அன்று காலை 10.00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தகுதியுள்ள வேட்பாளர்கள் பட்டியல் 25.09.2021 அன்று வெளியிடப்பட்டது. வேட்பாளர்கள் வேட்பு மனுவை திரும்ப பெறும் நாளான 25.09.2021 அன்று தங்கள் வேட்பு மனுக்களை திரும்ப பெற்றதால் 33 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களும், 1 கிராம ஊராட்சி மன்றத்தலைவரும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

எஞ்சிய அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் நல்லம்பாள்சமுத்திரம் ஊராட்சி வார்டு எண்.2 மற்றும் திருவாக்குடி ஊராட்சி வார்டு எண்.5, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், தாந்தாணி ஊராட்சி வார்டு எண்.4, திருமயம் ஊராட்சி ஒன்றியம், நெய்வாசல் ஊராட்சி வார்டு எண்.9, பி.அழகாபுரி ஊராட்சி வார்டு எண்.4, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், குலமங்களம் தெற்கு ஊராட்சி வார்டு எண்.9, வேங்கிடகுளம் ஊராட்சி வார்டு எண்.7 மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், ஆர்.பாலக்குறிச்சி ஊராட்சி வார்டு எண்.7 என மொத்தம் 8 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மறவாமதுரை, அரசமலை கிராம ஊராட்சித் தலைவர் பதவிக்கும், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழப்பனையூர் கிராம ஊராட்சித் தலைவர் பதவிக்கும், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாங்காடு ஊராட்சி மன்றத்தலைவர் பதவிக்கும், திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 5-வது ஒன்றியக்குழு வார்டு உறுப்பினர் பதவிக்கும், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 9-வது மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவிக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது.

மேலும் வாக்குப்பதிவு 09.10.2021 அன்று காலை 7.00 முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும். கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் உள்ள வாக்காளர்கள் வாக்குப்பதிவு நாளான 09.10.2021 அன்று மாலை 5.00 மணி முதல் 6.00 மணிவரை வாக்களித்திட சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. பதிவாகும் வாக்குகள் அனைத்தும் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையங்களில் 12.10.2021 அன்று காலை 8.00 மணி முதல் எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும். தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் 16.10.2021 முன்பாக முடிவடையும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**